சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொழிலாளர் துறை – திருமதி.டி.பிரவீணா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (இ2)த் துறை

அரசாணை (3டி) எண். 04

நாள் 22.05.2023

சோபகிருது வருடம் – வைகாசி 8
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:

1. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.ஐ3/25339/2020, நாள் 19.01.2022.
2. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கடித எண்.ஐ3/8624/2022, நாள் 13.02.2023.
3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர், நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ,1) துறை, நாள் 08.03.2023.

------

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணையில், காலஞ்சென்ற திரு.இரா.சதீஷ்குமார், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம், மதுரை என்பவரின் மனைவி திருமதி.டி.பிரவீணா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது என்றும், தனியர் 22.01.2022 அன்று முற்பகல் முதல் மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளின்படி இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார் என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்து, தனியரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 22.01.2022 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு, மேலே

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணி நியமனம்) விதிகள் 2023-ன்படி அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.இரா.சதீஷ்குமார், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) என்பவரின் மனைவி திருமதி.டி.பிரவீணா என்பவரை, தொழிலாளர் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பணியிடத்தில், அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 22.01.2022 அன்று முற்பகல் முதல், பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற நடைமுறையில் உள்ள விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் மனிதவள மேலாண்மைத் (ஜி) துறையின் அ.சா.எண்.4467910/ஜி2/2023, நாள் 12.05.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை- 600 006.
திருமதி.டி.பிரவீணா, இளநிலை உதவியாளர்
(தொழிலாளர் ஆணையர், சென்னை -6 வழியாக)

நகல்:
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ/அநமு.2) துறை, சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
சுத்த நகல் கோப்பிற்கு (1135/இ2/2023)
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

23/5/23
பிரிவு அலுவலர்.
23/5/23